(3) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் விவர அட்டவணைகளைத் திருத்த அரசு பிறப்பிக்கவிருக்கும் வரைவு விதிகள்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : "தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், மேற்படி சட்டத்தின் 11, 111இ விவர அட்டவணைகளைத் திருத்தும் வண்ணம் மாநில அரசு பிறப்பிக்கவிருக்கும் கீழ்க் காணும் வரைவு விதிகள் மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் கண்டுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டுமென", முன் மொழிகிறேன்.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சட்டத்தின் 11, 111 விவர அட்டவணைகளில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வரும் திருத்தங்களைச் செய்கிறார்.

திருத்தங்கள்

(1) மேற்சொன்ன 11 விவர அட்டவணையில் (1) பத்தியில் 4 இனத்திற்கெதிராக உள்ள (2), (3) பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.—

"100.00 150.00"

(2) மேற்படி 111 விவர அட்டவணையில் (1) பத்தியில் (4) இனத்திற்கெதிராக உள்ள (2) முதல் (5) வரையுள்ள பத்திகளில் காணும் பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் :—

"12.00 36.00 18.00 54.00

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(இ) தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கும் வரைவு அறிவிப்பு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் வெளியிடப்பட இருக்கிற அறிவிப்பின் கீழ்க்காணும் வரைவு அப்பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்கப்படுவதாக."

1971 ஜூலை 30]

வரைவு அறிவிப்பு.

தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 12/1966) இந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகிற நாள் முதற்கொண்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களில் செயலுக்கு வரவேண்டு மெனத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் இதனல் கட்டளை யிடுகிறார்.

விளக்கக் குறிப்பு.

இம்மாநில அரசின் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு அரசு மேற் கொள்ளும் முயற்சியின் பகுதியாக, தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) விதித் துறைகளைத் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களுக்கு நீட்டிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, அரசு அறிவிப்பு வெளியிட்டு குறிப்பிட்ட நகராட்சி நகரில் அல்லது நகரியத்தில் இச் சட்டம் அந்த அறிவிப்பில் குறிப்பிடக் கூடிய நாள்முதல் செயலுக்கு வரவேண்டுமெனக் கட்டளையிடலாம். மேற்கூறியவாறு குறிப்பான விதித்துறை இருப்பதால், மூலச் சட்டத்தைத் திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகராட்சி நகர்களுக்கே நீட்டிக்கலா மேயன்றி, மதுரை மாநகருக்கு நீட்டிக்க இயலாது. 1971-ம் ஆண்டு 18-ம் எண் சட்டமன்றப் பேரவை மசோதாவின் 2-வது பகுதியைச் சேர்ந்த ( ) உட்பகுதியில், "நகராட்சிநகர்" என்பதற்கு மதுரை மாநகரையும் உட்படுத்தும் வகையில் பொருள் விளக்கம் கூறப் பட்டுள்ளது. எனவே இத்திருத்த மசோதா சட்டமாக இயற்றப் பட்டபின், மூலச்சட்டம் மதுரை மாநகருக்கு நீட்டிக்கப் படலாம்.

தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (b) பகுதியின் கீழ் வெளியிடக் கருதியுள்ள அறிவிப்பின் வரைவு, சட்ட மன்றப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டுமென்றும், சட்டப் பேரவை மாறுதல் அல்லது சேர்க்கை இன்றியோ, மாறுதல் அல்லது சேர்க்கையுடனே, அவ்வரைவுக்கு ஏற்பளித்தாலொழிய அதனை வெளியிடக் கூடாதென்றும், அத்தகைய ஏற்பு அளிக்கப் படுவதன் மேல் அந்த அறிவிப்பு ஏற்பு அளிக்கப்பட்ட வடிவில் பிறப்பிக்கப்பட வேண்டுமென்றும், அந்த அறிவிப்பு அவ்வாறு பிறப் பிக்கப்படுவதன் மேல், தமிழ்நாடு அரசு இதழில் வெளியிடப்பட வேண்டுமென்றும், அதன் பிறகு அது பயனும் திறனும் உடைத்தா யிருக்குமென்றும் அச்சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, அவ்வாறே தீர்மானம் கொண்டுவருவதென அரசு கருதுகிறது.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.